பக்கங்கள் 12+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஐப்பசி 20 சனிக்கிழமை 16.11.2024 | அதிர்வு 107

## தேசியப் பட்டியல் ஊடாக சபை வருகின்றார் நாமல்



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சிக்குக் கிடைக்கப் பெற்றுள்ள தேசியப் பட்டியல் வாய்ப்பை அந்தக் கட்சியின் தேசிய 02

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# உரத்தோடும் உறுதியோடும் எனது தமிழ்த் தேசியப் பயணம் தொடரும்

### தமிழரசின் யாழ். மாவட்ட எம்.பி. சிறீதரன் சபதம்



"வலிமை மிகு வாக்குகளால் எனக்கு ஆணை வழங்கிய மக்களுக்கு எனது மனப்பூர்வமான நன்றி. உரத்தோடும் உறுதியோடும் எனது தமிழ்த் தேசியப் பயணம் தொடரும்."

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தில் இருந்து மீண்டும் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ள சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

தனது வெற்றி குறித்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"திட்டமிட்டு பின்னப்பட்ட சதிவலைகளின் உள்ளிருந்தவாறே தமிழ்த் தேசியத்தின் இருப்புக்காகப் போராடத் தலைப்பட்ட என்னையும், எனது பாதையையும் ஏற்று வலிமை மிகு வாக்குகளால் ஆணை வழங்கிய மக்களுக்கு எனது மனப்பூர்வமான நன்றி!

உரத்தோடும் உறுதியோடும் எனது தமிழ்த் தேசியப் பயணம் தொடரும்.

"தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும் மீண்டும் தர்மமே வெல்லும்" – என்றார்.

# புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்த அரிய சந்தர்ப்பம்

### தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட எம்.பி. ஜெகதீஸ்வரன் தெரிவிப்பு



(கி.வசந்தன்)

தேர்தல் முடிவுகள் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய அரிய சந்தர்ப்பத்தைத் தந்துள்ளது என்று தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவாகியுள்ள ம.ஜெகதீஸ்வரன் தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் வெற்றி தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துக் கூறியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"வெளியாகிய தேர்தல் முடிவுகளின்படி தேசிய மக்கள் சக்தி வன்னி மாவட்டத்தில் இரண்டு ஆசனங்களைப் பெற்றுள்ளது. உண்மையில் 02

# வன்னி தேர்தல் மாவட்டத்தில் 15,254 வாக்குகள் நிராகரிப்பு

(கி.வசந்தன்)

வன்னியில் நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் தபால் மூல வாக்குகள் 466 உட்பட 15 ஆயிரத்து 254 வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளன என்று மாவட்ட தேர்தல் தெரிவத் தாட்சி அலுவலர் பீ.ஏ.சரத்சந்திர தெரிவித்தார்.

வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவை உள்ளடக்கிய வன்னித் தேர்தல் தொகுதியில் 3 இலட்சத்து 6 ஆயிரத்து 81 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர். இதில் 2 இலட்சத்து 11 ஆயிரத்து 140 பேர் வாக்களித்தனர். அதில் தபால் மூல வாக்களிப்பு 466 உட்பட 15 ஆயிரத்து 254 வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளதுடன், ஒரு இலட்சத்து 95 ஆயிரத்து 886 வாக்குகள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

# வடக்கு – கிழக்கு மக்களின் எதிர்பார்ப்பை ஜனாதிபதி நிறைவேற்றியே தீர வேண்டும்

## ஐக்கிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட எம்.பி. ரிஷாத் வலியுறுத்து



(கி.வசந்தன்)

"வடக்கு – கிழக்கு சார்ந்த மக்கள் ஜனாதிபதி அநுரவின் கட்சிக்கு வாக்களித்துள்ளார்கள். எனவே, வடக்கு – கிழக்கு மக்கள் பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதிக்குப் பாரிய பொறுப்பு இருக்கின்றது."

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக மீண்டும் தெரிவாகியுள்ள ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

தனது வெற்றி குறித்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"வன்னி மாவட்டத்தில் 6 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். ஜனாதிபதி தலைமையிலான கட்சி போனஸ் ஆசனம் உட்பட இரண்டு ஆசனங்களைப் பெற்றுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தி ஓர் ஆசனத்தைப் பெற்று, மாவட்டத்தில் அதிகூடிய வாக்கை வன்னி மக்கள் எனக்கு வழங்கியுள்ளார்கள். எமது கட்சியில் போட்டியிட்ட அனைவரதும் அயராத முயற்சிதான் இந்த வெற்றிக்குக் காரணம். மாவட்ட மக்களுக்கும் நன்றி கூறுகின்றேன்.

வன்னி மாவட்ட மக்களுக்கான பணியை நான் தொடர்ந்தும் முன்னெடுப்பேன். அதுபோல் அம்பாறை மாவட்டத்தில் எனது கட்சி தனியாகப் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளது. அந்த மக்களுக்கும் எனது நன்றி.

புத்தளம், அனுராதபுரம், குருநாகல், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் எமது கட்சிக்கு மக்கள் வாக்களித்தாலும் வெல்ல முடியவில்லை. அந்த மக்களுக்கும் எனது நன்றிகள்.

தேர்தலுக்குப் பின் எனது பணி முன்னர் செய்ததை விட அதிகமாக இருக்கும் என்பதைக் கூறிக் கொள்கின்றேன். இந்தத் தேர்தல் ஒரு புதிய செய்தியைச் சொல்லியிருக்கிறது. நாட்டு மக்கள் பெரும் எதிர்பார்ப்போடு ஜனாதிபதியையும், ஜனாதிபதியின் கட்சியையும் வெல்லச் செய்திருக்கின்றார்கள்.

குறிப்பாக வடக்கு – கிழக்கு மக்கள் கூட இந்த ஜனாதிபதியைச் சார்ந்த கட்சிக்கு வாக்களித்துள்ளார்கள். எனவே ஜனாதிபதிக்கு ஒரு பாரிய பொறுப்பு இருக்கின்றது. மக்களின் எதிர்பார்ப்புக்களை ஜனாதிபதி நிறைவேற்றுவார் என நாம் நம்புகின்றோம். அத்துடன் ஜனாதிபதிக்கும், அவரது கட்சிக்கும், புதிய உறுப்பினர்களும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்." – என்றார்.

# பொகவந்தலாவையில் சிறுமியின் சடலம் மீட்பு!

பொகவந்தலாவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெட்ரசோ தோட்டப் பகுதியில் உள்ள வீடொன்றில் சிறுமி ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பெட்ரசோ தோட்டப் பகுதியில் வசிக்கும் 11 வயதுடைய சிறுமியே சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொகவந்தலாவை பொலிஸார் தெரிவித்ததுள்ளனர்.

சிறுமியின் சடலம் பிரேத பரிசோதனைக்காக திக்ஓயா ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொகவந்தலாவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**புரட்சிகரமான...**

முற்றுமுழுதாக நாங்கள் எமது பிரதேச மக்களுக்கு நன்றி கூறுகின்றோம்.

எதிர்காலத்தில் தேசிய மக்கள் சக்தி புதிய அரசை அமைத்து மக்களுக்குத் தேவையான புதிய திட்டங்களை நடைமுறைப்படுத்த நாங்கள் தீர்மானித்துள்ளோம்.

நாடு முழுவதும் சிறப்பான வெற்றியைப் பெற்றுள்ளோம். இது புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய சந்தர்ப்பத்தைத் தந்துள்ளது.

மக்கள் மயப்படுத்தப்பட்ட அனைத்து சமூகங்களுக்கும் உள்ளடக்கக் கூடிய வகையில் – அனைத்து சமூகங்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஓர் ஆட்சியை நடத்துவோம்." – என்றார்.

**தேசியப் பட்டியல்...**

அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷவுக்கு வழங்குவதற்குக் கட்சி தீர்மானித்துள்ளது.

இதன்படி எதிர்வரும் 21 ஆம் திகதி மொட்டுக் கட்சி சார்பாக நாமல் சபைக்கு வரவுள்ளார்.

பொதுத் தேர்தலில் மொட்டுக் கட்சிக்கு இரண்டு ஆசனங்கள் கிடைத்துள்ளன. தேசியப் பட்டியல் ஊடாக ஓர் ஆசனம் என அக்கட்சி சார்பில் மூவர் சபைக்குச் செல்கின்றனர்.





# மாத்தளையில் பாடசாலையில் நேற்றுத் தீ பரவியதால் நாசம்!

மாத்தளையில் உள்ள தேசிய பாடசாலை ஒன்றில் தொழிநுட்ப கட்டடத் தொகுதி தீப்பற்றி எரிந்து முற்றாக சேதமடைந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த தீ விபத்து சம்பவமானது நேற்று (15) இடம்பெற்றுள்ளது.

மாத்தளை – உக்குவெல அஜ்மீர் வித்தியாலயத்தின் ஆய்வகத்திலேயே இவ்வாறு தீ பரவியுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

பாடசாலையில் தொழிநுட்ப கட்டடத் தொகுதி மின்சார ஒழுக்கு காரணமாகவே தீப்பற்றியுள்ளது என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்த தீ விபத்தால் கட்டடத் தொகுதி முழுமையாக சேதமடைந்துள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களை பதிவு செய்யும் நடவடிக்கைகள் நாளை!

இலங்கையின் 10 ஆவது நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களைப் பதிவு செய்யும் நடவடிக்கை நாளை (17) முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

நாளை முதல் இணையவழி ஊடாக புதிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் தம்மை பதிவு செய்துக் கொள்ளலாம் என்று நாடாளுமன்ற தொடர்பாடல் பிரிவு தெரிவித்துள்ளது.

சம்பந்தப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமக்கு தேவையான தகவல்களை அறிந்து கொள்வதற்காக எதிர்வரும் 19 மற்றும் 20 ஆம் திகதிகளில் நாடாளுமன்றத்தில் இரண்டு தகவல் சாளரங்களை திறப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நாடாளுமன்ற மரபு மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் தொடர்பில் 03 நாள் செயலமர்வு நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, 25, 26, 27 ஆகிய திகதிகளில் செயலமர்வு நடைபெறவுள்ளது. இது தொடர்பான வர்த்தமானி அறிவிப்பு இன்று (16) வெளியிடப்படவுள்ளது என்ற அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை புதிய நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வு எதிர்வரும் 21 ஆம் திகதி கூடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கண்டி மாவட்ட மக்களுக்கு எனது தேவை இனி இல்லை!

## மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவிப்பு



முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, அரசியலில் இருந்து ஓய்வு பெறுகிறார் என்று அறிவித்துள்ளார்.

மூன்று தசாப்தங்களாக அரசியலில் ஈடுபட்டு வருகிறார் என்றும் கண்டி மாவட்ட மக்களுக்கு தனது தேவை இல்லை என்பதை பொதுத் தேர்தலில் காட்டியுள்ளனர் என்றும் அளுத்கமகே கூறியுள்ளார்.

தனது கட்சி அலுவலகத்தில் இன்று (16) நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் இதனை கூறியுள்ளார்.

மேலும் கருத்து தெரிவித்த அவர்,

இவ்வருடப் பொதுத் தேர்தலில் புதிய ஜனநாயக முன்னணியின் சார்பில் கண்டி மாவட்டத்தில் எரிவாயு சிலிண்டர் சின்னத்தில் போட்டியிட்டேன்.

வாக்காளர்கள் 20,401 வாக்குகளையே வழங்கினார்கள். கடந்த தேர்தலில் நான் கிட்டத்தட்ட இரண்டு லட்சம் வாக்குகளைப் பெற்றிருந்தேன்.

மக்களுக்கு எனது அரசியல் தேவையில்லை. எனது அரசியல் பயணத்தின் போது தொடர்ச்சியாகப் பல்வேறு நபர்களும் ஊடகங்களும் என்னை அவதூறாகப் பேசினாலும் அவற்றைப் பொறுத்துக் கொண்டு எனது தொகுதியின் வாக்காளர்களுக்காகவே அரசியலில் இருந்தேன்.- என்றார்.

# தேர்தல் முடிந்த நிலையில் ஒரு வாரத்துக்கு நாடு முழுவதும் பொலிஸார் கண்காணிப்பு!



நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து ஒரு வாரத்துக்கு தேர்தலுக்கு பிந்தைய காலம் நாடு முழுவதும் பொலிஸாரின் தீவிர கண்காணிப்பு நடைமுறையில் இருக்கும் என பொலிஸார் அறிவித்துள்ளனர்.

இந்தக் காலப் பகுதியில் நாடு முழுவதும் பொலிஸாரின் தீவிர கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதிப் பொலிஸ்மா அதிபருமான சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தெளிவுபடுத்திய பொலிஸ்மா அதிபர்,

இப்போது தேர்தலுக்குப் பிந்தைய காலம் தொடங்குகிறது. ஒரு வார காலப் பகுதியில், பொது இடங்களில் எந்தவிதமான கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் பேரணியை நடத்த முடியாது.

எனவே, இந்த காலகட்டத்தில் காவல்துறையினர் தீவிர கண்காணிப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மேலும், நாடு முழுவதும் ரோந்து பயணங்களில் ஈடுபடுவதன் மூலம் தேவையான பாதுகாப்பு வழங்கப்படுகிறது.

புலனாய்வு அதிகாரிகள் பணியில் உள்ளனர். பிரத்தியேகமாக அடையாளம் காணப்பட்ட பொலிஸ் பிரிவுகளில் விசேட பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

தேர்தலுக்கு முந்திய காலப்பகுதியில் தேர்தல் சட்டத்தை மீறிய 581 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். எந்தப் பகுதியிலும் வன்முறை எதுவும் பதிவாகவில்லை.

இதுவரை கைது செய்யப்பட்ட 581 பேரில் 18 வேட்பாளர்கள் உள்ளனர். மீதமுள்ளவர்கள் ஆதரவாளர்கள்.- என்றார்.



# மாடுகள் கடத்த வந்த சந்தேகத்தில் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ள வாகனம்

## புதுக்குடியிருப்பு பகுதியில் சம்பவம்

மாடுகளை கடத்தி செல்வதற்கு பயன்படுத்தபட்டதாகச் சந்தேகிக்கப்படும் வாகனம் ஒன்றைப் புதுக்குடியிருப்பு பகுதியில் வைத்து இளைஞர்கள் மடக்கியுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று (15) இரவு நடைபெற்றுள்ளது.

சம்பவம் குறித்து தெரியவருவதாவது,

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் அண்மைக்காலமாக வளர்ப்பு மாடுகள் திருட்டுப்போகும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

கடந்த மாதம் புதுக்குடியிருப்பு கோம்பாவில் பகுதியில் வீட்டு காணி ஒன்றில் இருந்த சிறிய பட்டியில் இருந்த மாடுகள் திருட்டு போயிருந்தன.

அதேபோல் புதுக்குடியிருப்பு பகுதிகளில் அதிகளவான வளர்ப்பு மாடுகள் திருட்டு போயுள்ளன.

இதனையடுத்து குறித்த கால்நடை வளர்ப்பு உரிமையாளர்களால் பொலிஸில் முறைப்பாடு வழங்கியும் தொடர்புடையவர்கள்கைதுசெய்யப்படவில்லை.

இதனையடுத்து மாடு கடத்துவதற்கு பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் வாகனம் ஒன்று நடமாடுவதை அவதானித்த மக்கள் கடந்த சில நாள்களுக்கு முன்னர் பிடிக்க முயற்சி செய்து பலனளிக்கவில்லை. இந்த நிலையில் வாகன இலக்கத்தைக் கண்காணித்து வைத்துள்ளனர்.

இந்நிலையில், நேற்று அந்த வாகனம் புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் சென்ற நிலையில் இளைஞர்கள் ஒன்றிணைந்து மடக்கிப் பிடித்துள்ளனர்.

இதனையடுத்து குறித்த பகுதியில் அமைதியின்மை ஏற்பட்டதை தொடர்ந்து பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டிருந்தது.

அதனையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் குறித்த வாகனத்துடன் சாரதியைப் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து சென்றனர்.

வாகனத்தை நீதிமன்றில் முற்படுத்தும் நடவடிக்கையைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் புதுக்குடியிருப்பு பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# நித்திரையில் உயிரிழந்த ஐந்து மாத ஆண் குழந்தை

(வடமராட்சி)

ஐந்து மாத ஆண் குழந்தை ஒன்று படுக்கையில் உயிரிழந்த சம்பவம் வடமராட்சி பண்டாரியம்மன் கோவிலடி, தம்பசிட்டி பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை (15) அதிகாலை இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு உயிரிழந்த குழந்தை அதே இடத்தைச் சேர்ந்த பிரசாத் பிரஜித் என்ற குழந்தையாகும்.

நேற்று (15) அதிகாலை குழந்தைக்கு பால் ஊட்டுவதற்காக தாயார் பார்த்தபோது குழந்தை குளிர்ந்த நிலையில் காணப்பட்டது. இதனை அடுத்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றபோது அங்கு குழந்தை முன்னரே இறந்துவிட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த மரணம் தொடர்பில் பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா விசாரணை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார். சாட்சிகளை பருத்தித்துறைப் பொலிசார் நெறிப்படுத்தினர்.

குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998



## நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


# பெரும் துரதிஷ்டம்

நடந்து முடிந்த பொதுத் தேர்தல் வழமையை விடவும் வேறுபாடானது, மிக முக்கியமானது, அது குறித்து மிகுந்த கவனம் எடுத்து, சிந்தித்து, ஆழமாக யோசித்து வாக்களியுங்கள் என்று தேர்தலுக்கு முன்னர் தமிழர் தரப்புகளினால் அதிகம் வலியுறுத்தப்பட்டது. ஆனால் வடபகுதி வாக்காளர்கள் பொறுப்புடன் - தீர்க்கதரிசனத்துடன் - செயல்படவில்லை. சின்னத்தனமாகவும் சில்மிஷத்தனமாகவும் நடந்து கொண்டார்கள்.

நாட்டின் அரசமைப்பையே மாற்றப் போகின்ற காலகட்டத்தில், தனது தேசிய இனத்தின் தலைவிதியை தீர்மானிக்கும் பொறுப்பையும் சேர்த்து சிங்களத்திடம் தாரை வார்த்திருக்கின்றது வடக்குத் தமிழினம். மிக ஆபத்தான போக்கு இது.

இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் கொண்டுவரப்பட்ட இரண்டு அரசமைப்புகளும் - 1972 இன் குடியரசு யாப்பும், நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமைக்கு வழி செய்த 1978 யாப்பும் - இலங்கையில் தமிழர் தேசத்தின் இணக்கத்துடன் கொண்டுவரப்பட்டவை அல்ல. தமிழர்களின் தேசிய இனத்தின் மீது பௌத்த - சிங்கள மேலாதிக்கத்தினால், பெருந் தேசியவாதத்தினால், தமிழர்கள் மீது வல்வந்தமாக திணிக்கப்பட்ட யாப்புகள் அவை என்பது உலகம் ஏற்றுக் கொண்ட உண்மை. அந்த யாப்புக்களின் தயாரிப்புகளில் தமிழர் தரப்பின் பிரதிநிதித்துவம் பங்களிக்கவில்லை. தமிழர் தரப்பின் யோசனைகளைத் தூக்கிக் கடாசி விட்டுத்தான் அந்த அரசமைப்புகள் தமிழர் தேசத்தின் மீதும் திணிக்கப்பட்டன.

அதனால்தான் தமிழர்களின் உரிமைகளுக்கான - கௌரவ வாழ்வுக்கான - இலங்கை தீவில், தமது தாயக பிரதேசங்களில், நின்று, நிலைத்து, நீடித்து இருத்தலுக்கான - அவர்களின் போராட்டம் நியாயமானது என்று சர்வதேசம் ஏற்றுக்கொண்டது. தமிழர்கள் தமது வாழ்வியலின் இருத்தலுக்கான போராட்டத்தை ஆயுத வழியில் மேற்கொண்ட போதும் கூட, அந்தக் காரணத்தினால்தான் அந்த ஆயுதப் போராட்டமும் நியாயப்படுத்தப்பட்டது. தமிழர்களின் ஆயுதப் போராட்டத்தை 'பயங்கரவாதம்' எனச் சித்திரித்த உலக தேசங்கள் கூட, தமிழர் தேசத்தையும் சேர்த்து நிர்வகிக்கப்படுவதற்கான அரசமைப்பு தமிழர் தேசத்தின் இணக்கத்துடன் கொண்டுவரப்பட்டது அல்ல, வல்வந்தமாக அதன் மீது திணிக்கப்பட்ட அடக்குமுறை சட்டம் என்ற கருத்தியலை ஓரளவு ஏற்றுக் கொண்டமையால்தான், தமிழர் தேசத்தின் ஆயுதப் போராட்டத்திலும் ஒரு நியாயம் இருப்பதாக வெளிப்படையாக இல்லாவிட்டாலும் தார்மீக ரீதியில் ஏற்றுக்கொண்டு செயல்பட்டன.

இப்போது 'வெண்ணை திரண்டு வரும் நேரத்தில் தாழியை உடைத்த கதையாக' செயற்பட்டிருக்கின்றார்கள் வடக்கு இலங்கையில் தமிழ் வாக்காளர்கள் பலரும். தென்னிலங்கையில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன், ஒரு புதிய அரசமைப்பை உருவாக்கும் எண்ணத்துடனும் இலக்குடனும் முழு பலத்துடனும் பெரும் தேசியவாத சக்தி ஒன்று ஆட்சி பீடம் ஏறி இருக்கும் இச்சமயத்தில், வடக்கு இலங்கைத் தமிழர்களின் பிரதிநிதித்துவ மேலாதிக்கத்தை அந்த தென்னிலங்கை தரப்பிடம் முன்யோசனை இன்றி வாரி வழங்கி, தன்நிலைபாட்டைக் குட்டிச்சுவராக்கி இருக்கின்றது வடக்குத் தமிழினம்.

அத்தகைய அரசமைப்பு உருவாக்க முயற்சியை தென்னிலங்கை ஆட்சி பீடம் முன்னெடுக்கும் போது, அவ்விடயம் தொடர்பில் தமிழர்களின் நலனை வலியுறுத்தக்கூடிய தகுந்த பிரதிநிதிகளை நாடாளுமன்றம் அனுப்பாத வடக்குத் தமிழர்கள், அவ்விடயத்தில் தமது இனத்தின் - சந்ததியின் - எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் பிரதிநிதித்துவ அதிகாரத்தையும் அதே தென்னிலங்கை அரசுத் தலைமையிடமே பொறுப்பின்றி வாரி வழங்கி விட்டார்கள்.

புதிய அரசினால் உருவாக்கப்படக்கூடிய உத்தேச அரசமைப்பை தமிழர்கள் இனிக் கேட்டுக் கேள்வியின்றி ஏற்று கொண்டேயாக வேண்டும். ஏனெனில் அவர்களின் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவ உரிமையை - உருத்தை - தன் கைவசம் வைத்திருக்கும் ஆட்சி பீடத்தினால் அந்த அரசமைப்பு தமிழர் மீதும் சேர்த்து மீண்டும் திணிக்கப்பட போகின்றது. அது நிறைவேற்றப்படும் போது கூட, அதில் உள்ள குறைபாடுகளை சர்வதேசத்திடம் முன்வைத்து, தமிழர்களின் வேணவாவை உரிய முறையில் பிரதிபலித்துக் காட்டக்கூடிய தகுந்த பிரதிநிதிகளை வடக்கு இலங்கை நாடாளுமன்றுக்கு அனுப்பவில்லை. அது மாத்திரமின்றி, அந்தப் பிரதிநிதித்துவ உரிமையை அந்த ஆட்சி பீடத்திடமே பெரும்பான்மையாக வழங்கிவிட்டு, 'அணில் ஏற விட்ட நாயாக' கீழிருந்து அர்த்தம் இன்றி குரைக்கும் வேலையைத்தான் இனி தமிழர்கள் செய்ய முடியும்.

தமது தேசம் மீது சிங்களம் ஓர் அரசமைப்பை வல்வந்தமாக திணிப்பதற்கு நமது சட்டபூர்வ 'புறொக்ஸி'யை நாமே அந்த சிங்களத்திடம் கையளித்திருக்கிறோம். இது தமிழினத்தின் பொறுப்பற்ற - இழிமைத்தனமான - பெரும் துரதிஷ்டம்.

# பொதுத் தேர்தலில் 20 பெண்கள் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு!

2024 ஆம் ஆண்டுக்கான பொதுத் தேர்தலில் 20 பெண்கள் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளனர்.

இவர்களில் பெரும்பாலான பெண்கள் தேசிய மக்கள் சக்தி கட்சியில் இருந்து தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தேசிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட பட்டியலில் இருந்து பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஹரிணி அமரசூரிய, கடந்த பொதுத் தேர்தலின் போது தேசிய பட்டியல் ஊடாக தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

தேசிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்டத்தில் சமன்மலி குணசிங்க, பதுளை மாவட்டத்தில் அம்பிகா சாமுவேல், நிலாந்தி கோட்டஹச்சி, களுத்துறை மாவட்டத்தில் ஓஷானி உமங்கா, மாத்தறை மாவட்டத்தில் சரோஜா போல்ராஜ், இரத்தினபுரி மாவட்டத்தில் நிலுஷா கமகே, கேகாலை மாவட்டத்தில் சாகரிகா அதாவுத, புத்தளம் மாவட்டத்தில் ஹிருணி விஜேசிங்க, மொனராகலை மாவட்டத்தில் சதுரி கங்கானி, கண்டி மாவட்டத்தில் துஷாரி ஜயசிங்க, காலி மாவட்டத்தில் ஹசர லியனகே, மாத்தளை மாவட்டத்தில் தீப்தி வாசலகே, யாழ். மாவட்டத்தில் ராசலிங்கம் வெண்ணிலா.

ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் சார்பில் கண்டி மற்றும் மாத்தளை மாவட்டங்களை பிரதிநித்துவம் செய்த இரண்டு பெண்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். முன்னாள், அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்லவின் மகளான சமிந்திரனி கிரியெல்ல, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹினி குமாரி விஜேரத்ன ஆகியோர் தெரிவாகியுள்ளனர்.



# 7 லட்சத்து 88 ஆயிரம் ரூபா பெறுமதியில் சந்நிதியான் ஆச்சிரம குடிதண்ணீர் திட்டம்

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பிரதேசத்துக்கு உட்பட்ட அம்பகாமம் கிராம மக்கள் நீண்டகாலம் எதிர்நோக்கி வந்த பாதுகாப்பான குடிதண்ணீர் பிரச்சினையை நிவர்த்தி செய்யும் நோக்கில் யாழ்ப்பாணம், வடமராட்சி, தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் குடிதண்ணீர் திட்டம் ஒன்று ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

7 லட்சத்து 88 ஆயிரம் ரூபா பெறுமதியில் பெறுமதியில் குடி தண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரம் ஒன்று பொருத்தப்பட்டு மக்கள் பாதுகாப்பான குடி தண்ணீர் பெறுவதற்காக அம்பகாமம் மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பாதுகாப்பான குடி தண்ணீர் தொகுதி பொருத்தப்பட்டு மக்களிடம் கையளிக்கும் நிகழ்வு அம்பகாமம் துர்க்கா மகளீர் அமைப்பு தலைவி தலைமையில் இடம் பெற்றுள்ளது.

இதனை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு திறந்து வைத்தார். இந்த நிகழ்வில் அம்பகாமம் மம்மில் பிள்ளையார் ஆலய நிர்வாகத்தினர், கிராம அபிவிருத்தி சங்க நிர்வாகத்தினர், கிராம மக்கள் மற்றும் ஆச்சிரம தொண்டர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.







# அமரர் நடராஜா ரவிராஜ் நினைவாக கைதடியில் மரம் நடுகை நிகழ்வு!

(த.சுபேசன்)

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் நடராஜா ரவிராஜ் நினைவாக கைதடி ஆயுள்வேத மருத்துவமனை முன்பாக கடந்த ஞாயிற்றுக்கிழமை மரம் நடுகை நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

பசுந்தேசம் அமைப்பும் இயற்கையின் நண்பர்கள் இயக்கமும் இணைந்து மரநடுகை நிகழ்வை முன்னெடுத்திருந்தன.

மேற்படி நிகழ்வில் கைதடி ஆயுள்வேத மருத்துவமனை வைத்தியர்களும் கலந்துகொண்டு மரக்கன்றுகளை நாட்டி வைத்தனர்.





# தமிழரசுக்குக் கிடைத்த தேசிய பட்டியல் ஆசனத்தை ஜெயசிறிலுக்கு வழங்குக!

## கட்சி ஆதரவாளர்கள் வலுவான கோரிக்கை

(வி.ரி.சகாதேவராஜா)

இலங்கை தமிழரசுக் கட்சிக்குக் கிடைத்துள்ள ஒரே ஒரு தேசிய பட்டியல் ஆசனத்தை கட்சியின் எதிர்கால ஸ்திரத்தன்மை கருதி அம்பாறை மாவட்ட வேட்பாளரும் முன்னாள் காரைதீவு பிரதேச சபையின் தவிசாளருமான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறிலுக்கு வழங்க வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்று வருகிறது.

சுமந்திரன் தன்னை மக்கள் நிராகரித்தால் தான் தேசியப் பட்டியலூடாக வரப் போவதில்லை என்று உறுதியாக கூறியுள்ளார்.

இந்த நிலையில் வடக்கு, கிழக்கில் இலங்கை தமிழரசுக் கட்சி பெற்ற 7 ஆசனங்களில் 5 ஆசனங்கள் கிழக்கில் பெற்றவை.

மட்டக்களப்பில் மூன்று தமிழரசுக் கட்சிநாடாளுமன்ற உறுப்பினர்கள்



தெரிவாகி ஸ்திர நிலையில் உள்ளனர். அங்கு ஒரு பிரதிநிதி தேவையில்லை.

ஆனால் அம்பாறை மாவட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினராகும் கோடீஸ்வரனோடு தோளோடு தோள் நின்று மாவட்ட மக்களுக்கு இன்னோரன்ன சேவைகளை வழங்க ஜெயசிறிலுக்கு வழங்குவதே பொருத்தமாகும்.

அம்பாறை மாவட்டத்தில் இலங்கை தமிழரசுக் கட்சியின் செல்வாக்கை மேலும் அதிகரித்து கட்சியை கட்டியெழுப்ப வேண்டுமாயின் சமூக செயற்பாட்டாளர் ஜெயசிறிலை தேசிய பட்டியல் ஆசனத்தை வழங்க வேண்டும்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் காரைதீவு பிரதேச கிளையின் தலைவர் கி.ஜெயசிறில் தேசிய பட்டியல் ஆசனத்தை வழங்கினால் கட்சி அபிவிருத்தி வளர்ச்சி காணும்.

இம்முறை தேர்தலில் ஆக சில நூறு வாக்கு வித்தியாசத்தில் பின் தங்கிய அவர்களுக்கு வழங்க வேண்டியதே எமது காலத்தின் கட்டாயம். இதில் பலருக்கு விருப்பு வெறுப்புகள் இருக்கலாம். ஆனால் இன்றுள்ள கள நிலைமைகளில் தேசிய அரசுடன் நெஞ்சு நிமிர்த்தி எதிர் உரையாடல் செய்யக் கூடிய தகுதி அடிப்படையில் கட்டாயம் வழங்குவதில் ஒத்துழைப்பது அனைவரதும் கடமையாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.





# வலுவிழந்து இருக்கும் மக்களின் காவலனாக எப்போதும் இருப்பேன்

## தமிழரசுக் கட்சியின் கவிந்திரன் கோடீஸ்வரன் தெரிவிப்பு

(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்ட திகாமடுல்ல மக்கள் 2024 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் பல சவால்களுக்கு மத்தியில் இலங்கை தமிழரசுக் கட்சி சார்பாக நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தை பெற பாடுபட்டனர். அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகள் தெரிவிக்கிறேன். வலுவிழந்து இருக்கின்ற மக்களின் காவலனாக எப்போதும் இருப்பேன்.

இவ்வாறு தமிழரசுக் கட்சியின் வெற்றி வேட்பாளர் கவிந்திரன் கோடீஸ்வரன் தெரிவித்தார்.

மக்கள் பிரதிநிதியாக தெரிவாகிய பின் காரைதீவு ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலயத்தில் நேற்று வெள்ளிக்கிழமை (15) இரவு வழிபாடுகளில் ஈடுபட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போது மேற்கண்டவாறு கூறினார்.

அம்பாறை மாவட்டத் தமிழ் நாடாளுமன்றப் பிரதிநிதியாக இலங்கை தமிழசு கட்சி சார்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான என்னை தெரிவு செய்த மக்களுக்கு நன்றிகள்.

நாடாளுமன்ற தேர்தலில் பல சவால்களுக்கு மத்தியில் இலங்கை தமிழரசு கட்சி சார்பாக நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை பெறுவதற்கு பெரும் பாடுபட்டுள்ளதை நான் அறிவேன்.

இந்தத் தேர்தல் பிரசாரத்துக்கு மக்கள் வழங்கிய பேராதரவுக்கு மிக்க நன்றிகள் என்று மேலும் தெரிவித்தார்.

# 6 லட்சத்து 67 ஆயிரத்து 240 வாக்குகள் நடைபெற்று முடிந்த தேர்தலில் நிராகரிப்பு!

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் பதிவான வாக்குகளில் 6 லட்சத்து 67 ஆயிரத்து 240 வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தேர்தலுக்கு தகுதியான வாக்காளர்களாக 17,140,354 பேர் காணப்பட்டனர். இதில் வாக்களித்த வாக்காளர்களின் எண்ணிக்கை 11,815,246 ஆகவும் காணப்பட்டுள்ளது.

இந்த நிலையில், செல்லுபடியான வாக்குகளின் எண்ணிக்கை 11,148,006 ஆகவும், நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை 6,67,240 ஆகவும் பதிவாகியுள்ளது.

இதேவேளை குறித்த தேர்தலை வரலாற்றில் மிகவும் அமைதியான தேர்தல் என்றே கூற முடியும் என பெப்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.





# மக்கள் எதிர்பார்க்கும் தூய அரசியலை முன்னெடுப்பதே எனது எதிர்பார்ப்பாகும்

## இம்ரான் மஹ்ரூப் தெரிவிப்பு

(ஏ.எச்.ஹஸ்பர்)

மக்கள் எதிர்பார்க்கும் தூய அரசியலை முன்னெடுப்பதற்கே எதிர்பார்க்கிறேன். மாறாக வாக்குகறை விற்கவோ சொந்த இலாபத்துக்காக பயன்படுத்தவோ பொக்கட்டுக்களை நிறைத்து கமிசன் அரசியலைச் செய்ய வோ மாட்டோம்.

ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிட்டு திருகோணமலை மாவட்டத்தில் இருந்து தெரிவான இம்ரான் மஹ்ரூப் இவ்வாறு தெரிவித்தார்.

கிண்ணியாவில் நேற்று (15) மாலை இடம் பெற்ற மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

மக்கள் எதிர்பார்த்த உண்மை நீதி நியாயமான தூய்மையான அரசியல் பயணத்தை முன்னெடுக்கவுள்ளோம்.

மக்கள் எதிர்பார்ப்பு மூலமாக சரியாக



தங்களது உறுப்பினர்களை தெரிவு செய்துள்ளார்கள். இதன் மூலம் ஊழல் அற்ற அரசியல் கலாசாரத்தை உருவாக்க வேண்டும் என்ற தீர்மானத்தை மக்கள் எடுத்துள்ளார்கள் .

இதனால் மக்களுடைய தேவைகளை நிறைவேற்ற வேண்டும். உரிமைகள் அபிவிருத்தி விடயங்களில் மக்களுக்காக அரசுடன் இணைந்து செய்ய வேண்டிய வேலைகளை செய்து மக்கள் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்ற வேண்டும்.

மூதூர் தொகுதியில் ஐக்கிய மக்கள் சக்தி வெற்றிவாகை சூடியுள்ள நிலையில் கடந்த காலங்களில் இரு உறுப்பினர்களைப் பெற்ற நிலையில் தற்போது ஒரு ஆசனத்தை பெற்றுள்ளோம்.

எனவே வாக்களித்த திருகோணமலை மாவட்ட மக்களுக்கு நன்றிகளையும் தெரிவிக்கிறேன்.- என்றார்.





# கட்சிக்கு வாக்களித்த அனைத்து வாக்காளருக்கும் உளமார்ந்த நன்றி!

## நாடாளுமன்றுக்குத் தெரிவாகியுள்ள அஷ்ரப் தாஹிர்

(பாறுக் ஷிஹான்)

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் ஒரு ஆசனத்தைப் பெற்றுக்கொள்வதற்காக உழைத்த பத்து வேட்பாளர்களுக்கும் கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள், போராளிகள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் கட்சியின் பிரதி தேசிய அமைப்பாளர் என்ற ரீதியில் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ்வாறு நிந்தவூர் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும் நாடாளுமன்றுக்குத் தெரிவு செய்யப்பட்டவருமான அஷ்ரப் தாஹிர் தெரிவித்தார்.

2024 நடைபெற்று முடிந்த 10 ஆவது நாடாளுமன்றத் தேர்தலில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி சார்பாக போட்டியிட்டு வெற்றி பெற்ற பின்னர் நேற்று வெள்ளிக்கிழமை (15) இரவு பொதுமக்களால் ஒழுங்கு செய்யப்பட்ட வரவேற்பு நிகழ்வில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

# தி.மு.க. கூட்டணியில் குழப்பம் ஏற்படுத்த வேண்டாம்: திருமாவளவனுக்கு கொமதேக ஈஸ்வரன் வேண்டுகோள்



தி.மு.க. கூட்டணியில் குழப்பம் ஏற்படுத்தக் கூடிய நடவடிக்கைகளை வி.சி.க. தலைவர் திருமாவளவன் தவிர்க்க வேண்டும் என்று கொங்குநாடு மக்கள் தேசியக் கட்சி பொதுச் செயலாளர் ஈஸ்வரன் தெரிவித்தார்.

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோட்டில் செய்தியாளர்களிடம் அவர் நேற்று கருத்து தெரிவிக்கையில்,

"விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சமீபத்திய செயல்பாடுகள், தி.மு.க. கூட்டணி யில் குழப்பம் இருப்பது போன்ற தோற்றத்தை ஏற்படுத்தி வருகின்றன. இத்தகைய நடவடிக்கைகளை திருமாவளவன் தவிர்க்க வேண்டும்.

தி.மு.க. கூட்டணியின் வெற்றிக்காக, மாவட்டம் வாரியாகச் சென்று முதல்வர் ஸ்டாலின் கள ஆய்வு மேற்கொண்டு வருகிறார். இந்நிலையில், நம்முடைய செயல்பாடுகள் கூட்டணியை பலவீனப்படுத்துவதாக இருக்கக் கூடாது. எனவே, குழப்பம் ஏற்படுத்தக் கூடிய நடவடிக்கைகளை திருமாவளவன் தவிர்ப்பது நல்லது"– என்றார்.

# அரசியலுக்கு வந்தபோது நானும் உச்ச நடிகர்தான்

## சரத்குமார் கூறுகின்றார்

"மறைந்த முதல்வர் ஜெயலலிதாவை எதிர்த்து அரசியலுக்கு வந்தபோது நானும் உச்ச நடிகர்தான். அதிகமான ரசிகர்கள் இருந்த நேரத்திலும், பெரிய பெரிய வெற்றிப் படங்களைக் கொடுத்த போதுதான் நானும் அரசியலுக்கு வந்தேன். அதற்கு காரணம் மக்கள் சேவைதான்."

– இவ்வாறு சரத்குமார் கூறியுள்ளார்.

சென்னையில் பா.ஜ.கவைச் சேர்ந்த சரத்குமார் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் குறிப்பிடுகையில்,

"1996 ஆம் ஆண்டு தமிழகத்தில், இருந்த மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா ஆட்சியை எதிர்த்து, தனிமனிதனாக அரசியலுக்கு வந்தேன். அன்றைக்கு யாருக்கு அந்த தைரியமும், திராணியும் கிடையாது. அந்த சமயத்தில், த.வெ.க. தலைவர் விஜய் கூறுவது போல உச்ச நடிகர்தான் நானும். மிகப் பெரிய ரசிகர்கள் இருந்தனர். அதிகமான ரசிகர்கள் தியேட்டருக்கு ஒரு படத்தைப் பார்த்தது என்றால், அது என்னுடைய படத்தைத்தான். அந்த சமயத்தில்தான் நான் அரசியலுக்கே வந்தேன்.

அதிகமான ரசிகர்கள் இருந்த நேரத்திலும், பெரிய பெரிய வெற்றிப் படங்களைக் கொடுத்தபோதுதான் நானும் அரசியலுக்கு வந்தேன். அதற்கு காரணம் மக்கள் சேவை. ஜெயலலிதாவை யாரும் எதிர்க்கவே முடியாது என்று அப்போது கூறினார்கள். என் வீட்டில் கல்லெறிந்து தாக்குதல் நடத்தினர். மலத்தைக் கழித்து ஊற்றினார்கள். ஆனாலும், நான் 40 நாள்கள் தொடர்ந்து பிரச்சாரம் செய்தேன்.

அதேபோல், நான் தனியாக அரசியல் கட்சி துவங்கியபோது, இரு மாபெரும் தலைவர்களை எதிர்த்து அரசியல் செய்தோம். எனவே, என்னைப் பொருத்தவரையில், எதுவும் சாத்தியம், உழைப்பும் உறுதியும் இருந்தால். உலகளவில் இந்தியாவுக்கு இன்றைக்கு மிகப்பெரிய புகழ்



கிடைத்திருக்கிறது என்றால், அதற்கு காரணம் பிரதமர் மோடி. உலகளவில் இந்தியர்களின் பெருமை உயர்ந்து விட்டது.

முந்தைய ஆட்சிக்கும், பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தபிறகு, தமிழக மீனவர்கள் எந்தளவுக்கு பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். பாதிப்புகள் குறைந்து கொண்டே வருகிறது. இலங்கை அரசுக்கு மிகப் பெரிய உதவியாக இருந்தால், தான் பொருளாதார ரீதியா அந்த நாடு வலுவான நிலையில் இருக்கிறது."

என்று அவர் கூறினார்.





# டில்லியில் வளி மாசடைந்து வருவதால் ஆரம்ப பாடசாலைகளுக்கு விடுமுறை

இந்தியாவின் தலைநகர் புதுடில்லியில் தொடர்ந்தும் வளி மாசடைந்து வருவதால் அனைத்து ஆரம்ப பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

மறு அறிவித்தல் வரை ஆரம்ப பாடசாலை மாணவர்களுக்கான கற்பித்தல் நடவடிக்கைகளை இணையம் மூலம் நடத்துமாறு அம்மாநில அரசு வலியுறுத்தியுள்ளது.

வளி மாசடைந்து வருவதால் புதுடில்லியைச் சுற்றியுள்ள பகுதிகளில் வசிப்பவர்கள் சுவாசக் கோளாறு மற்றும் கண் வீக்கம் போன்றவற்றால் பாதிக்கப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மேலும் வளி மாசடைவுடன் அடர்ந்த புகை மூட்டம் நிலவுவதால் டில்லி – இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்தில் விமானங்களை இயக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.



# இந்துக்களிடம் மன்னிப்புக் கோரியது பிரித்தானியாவின் பிரதமர் அலுவலகம்

தீபாவளி விருந்தில் அசைவம் மற்றும் மது வகைகள் பரிமாறப்பட்டமை குறித்து இந்திய வம்சாவளியைச் சேர்ந்த எம்.பி ஒருவர் அதிருப்தி தெரிவித்ததையடுத்து, பிரித்தானியா பிரதமர் அலுவலகம் மன்னிப்புக் கோரியுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் தீபாவளியையொட்டி பிரித்தானியா பிரதமர் அலுவலகம் சார்பில் சிறப்பு நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்படுவது வழக்கம். அந்த வகையில் கடந்த ஒக்டோபர் 29 அன்று லண்டனில் உள்ள பிரதமர் அலுவலகத்தில் தீபாவளி சிறப்பு நிகழ்வு நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து நடைபெற்ற விருந்தில் அசைவம் மற்றும் மது வகைகள் பரிமாறப்பட்டன.

இதனையடுத்து பிரிட்டிஷ் கன்சர்வேடிவ் கட்சி எம்.பி.யும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவருமான ஷிவானி ராஜா, தனது எக்ஸ் பக்கத்தில் இந்த விவகாரம் குறித்து அதிருப்தி தெரிவித்திருந்தார். அதில், “இந்த ஆண்டு நிகழ்வின் ஏற்பாடு மிக மோசமாகப் இருந்ததாக நான் உணர்கிறேன். எனது சொந்தத் தொகுதியான லெய்செஸ்டர் கிழக்கில் ஆயிரக்கணக்கான இந்து மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு இந்துவாக, இந்த கவனக்குறைவின் விளைவாக, அரசின் எதிர்மறையான தன்மையால் இந்த ஆண்டு விழா மறைக்கப்பட்டதை அறிந்து மிகவும் வேதனை அடைந்தேன்” என்று தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், தீபாவளி விருந்தில் அசைவம் மற்றும் மது பரிமாறப்பட்டது குறித்து பிரித்தானியா பிரதமர் அலுவலகம் மன்னிப்புக் கோரியுள்ளது.

“இந்த பிரச்சினையில் உணர்வின் வலிமையை நாங்கள் புரிந்துகொள்கிறோம், எனவே இந்து சமூகத்திடம் மன்னிப்பு கேட்கிறோம். இது மீண்டும் நடக்காது என்றும் உறுதியளிக்கிறோம்” என்று பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.





# ஹவுதி இலக்குகளுக்குகளை குறிவைத்து அமெரிக்கா தொடர்ச்சியான தாக்குதல்

யேமனில் உள்ள ஹவுதி இலக்குகளுக்குகளை குறிவைத்து அமெரிக்கா தொடர்ச்சியான இரண்டாவது இரவு தாக்குதல்களை மேற்கொண்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஹவுதிகளின் முக்கிய மூன்று இலக்குகளில் உள்ள ஏராளமான ஆயுத சேமிப்பு வசதிகளை குறிவைத்து போர் விமானங்கள் உதவியுடன் இந்த தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக அமெரிக்க பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேற்படி இலக்குகளில் செங்கடல் மற்றும் ஏடன் வளைகுடாவில் உள்ள கப்பல்களை தாக்குவதற்கு ஹவுதிக்கள் பயன்படுத்தும் மேம்பட்ட பாரம்பரிய ஆயுதங்கள் இருந்ததாக கூறப்படுகிறது.

இந்த நிலையில், உலகின் பரபரப்பான நீர்வழிப்பாதைகளில் ஒன்றான செங்கடலில் பல மாதங்களாக அமெரிக்கா உட்பட முக்கிய நாடுகளின் கப்பல்களை குறிவைத்த ஈரான் ஆதரவு ஹவுதிகள் , ஹமாஸ்'க்கு எதிரான இஸ்ரேலின் போருக்கு பதிலாக அந்த தாக்குதல்கள் நடத்தப்படுவதாக அறிவித்திருந்தனர்.

ஹவுதி, ஹமாஸ் மற்றும் ஹிஸ்புல்லா ஆகிய அனைத்தும் அமைப்புக்களும் ஈரான் தலைமையிலான கூட்டணியின் ஒரு பகுதியாக செயற்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், பலஸ்தீனப் பகுதியில் போர் நிறுத்தம் ஏற்படும் வரை இஸ்ரேல் மற்றும் அதன் நட்பு நாடுகளின் மீது தாக்குதல் நடத்துவதை நிறுத்தப் போவதில்லை என்று ஹவுதிக்கள் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.







பக்கங்கள் 03

கனடா முரசு

சனிக்கிழமை 16/11/2024

## காஸாவில் பேரழிவில் மனிதாபிமான நிலை

### கனடா எச்சரிக்கை

காஸாவில் பேரழிவை ஏற்படுத்தக்கூடிய மனிதாபிமான நிலை குறித்து கனடா ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளது.

மிக மோசமான ஊட்டச் 02

**Canadian Tamil Congress Congratulates Hon. Anura Kumara Dissanayake and National People's Power on Historic Election Victory**



**அனுரகுமார திஸாநாயக்க மற்றும் தேசிய மக்கள் சக்தி வரலாற்றுச் சிறப்புமிக்க தேர்தல் வெற்றிக்கு கனடிய தமிழர் பேரவையின் வாழ்த்துக்கள்.**

Canadian Tamil Congress
கனடியத் தமிழர் பேரவை
Congrès Tamoul Canadien
"Voice of Tamil Canadians"

# தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் வெற்றிக்கு கனடிய தமிழர் பேரவையின் வாழ்த்துக்கள்

## ஜனாதிபதிக்கு உத்தியோகபூர்வ கடிதம்

**கனடிய தமிழர் பேரவை ஜனாதிபதி அநுரகுமார திஸநாயகவுக்கு உத்தியோகபூர்வ கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.**

**நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தங்களின் மகத்தான வரலாற்று வெற்றிக்கு இலங்கையின் புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட அநுரகுமார திஸநாயக்க மற்றும் தேசிய மக்கள் சக்திக்கு கனடிய தமிழர் பேரவை வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றனர் என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.**

அந்தக் கடிதத்தில், தமிழ் கனடியர்களின் சார்பாக மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துள்ளதோடு மாற்றத்தக்க ஆட்சிக்கான தேசிய மக்கள் சக்தியின் பார்வையில் இலங்கை மக்களின் நம்பிக்கையின் பிரதிபலிப்பாக இந்த வெற்றி அமைந்துள்ளதையும் கனடிய தமிழர் பேரவை ஏற்றுக் கொண்டுள்ளது. தமிழர் பேரவை தனது அறிக்கையில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளபடி, வெளிப்படையான, பொறுப்புடைமை மற்றும் உள்ளடக்கிய அரசாங்கத்தை நிறுவுவதற்கான தேசிய மக்கள் சக்தியின் உறுதிமொழியை நினைவூட்டியதுடன், மேலும் இந்த நிர்வாகம் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் என்ற நம்பிக்கையை வெளிப்படுத்தியுள்ளது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை அகற்றிவிட்டு, ஜனநாயகத்திற்கும் தமிழ் மக்கள் உட்பட அனைத்து சமூகத்தினரின் உரிமைகளையும் பாதுகாப்பதற்கு முன்னுரிமையளிக்கும் புதிய அரசமைப்பை அறிமுகப்படுத்துவதற்கு தேசிய மக்கள் சக்தி முன் இருக்கும் வரலாற்றுச் சந்தர்ப்பத்தை கனடிய தமிழர் பேரவையின் கடிதம் எடுத்துக் காட்டியுள்ளது. தேர்தல் அறிக்கையின் மூலம், நீண்டகால குறைகளை நிவர்த்தி செய்ய உடனடி நடவடிக்கைகளை எடுக்கும்போது, அனைவருக்கும் நீதி, உள்ளடக்கம் மற்றும் சமத்துவத்தை உறுதி செய்யுமாறு அரசாங்கத்தை கனடிய தமிழர் பேரவை வலியுறுத்தியுள்ளது.

இந்த கடிதத்தில், கனடிய தமிழர் பேரவை பின்வரும் முக்கியமான நடவடிக்கைகளை முன்மொழிந்திருக்கின்றது.

**அரசியல் கைதிகளை விடுவித்தல்:**

எஞ்சியுள்ள அனைத்து அரசியல் கைதிகளையும் விடுவிப்பதன் மூலம் நல்லெண்ணத்தை வெளிப்படுத்துவது தேசிய நலன் மற்றும் ஒற்றுமைக்குக் குறிப்பிடத்தக்க பங்களிப்பை 02




## காஸாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சத்துக் குறைப்பாட்டினால் உயிருக்கு ஆபத்தான நிலை குறித்து கனடிய வெளியுறவு அமைச்சர் மெலனி ஜோலி எச்சரித்துள்ளார்.

வட காஸா பகுதியில், பஞ்சம் நிலவு கிறது அல்லது ஏற்படக்கூடிய வலுவான சாத்தியம் இருப்பதாகக் கூறி, பஞ்சம் தொடர்பான மறுஆய்வுக் குழு நவம்பர் 8 ஆம் திகதி வெளியிட்ட அறிக்கையை அவர் சுட்டியுள்ளார்.

முன்னதாக, காஸாவில் 133,000 பேர் பேரிழவை ஏற்படுத்தக்கூடிய உணவுப் பாதுகாப்பின்மையை எதிர்நோக்கியதாக அக்குழு கூறியது.

“காஸாவுக்குள் குறைவான மனி தாபிமான உதவி மட்டுமே அனு மதிக்கப்படுவதால், ஆண்கள், பெண்கள், குழந்தைகள் ஆகியோர் உயிரிழக்கின் றனர்,” என்று அசர்வதேச மேம்பாட்டு அமைச்சர் அஹ்மெண்ட் ஹுசைனுடன் வெளியிட்ட கூட்டு அறிக்கையில் திரு வாட்டி ஜோலி கூறினார்.

போதிய அளவிலான உதவி அதனை நம்பியிருப்போரைச் சென்றடைவதில்லை என்றும் மனிதா பிமான அமைப்பினரும் ஊழியர்களும் தொடர்ந்து தடைகளை எதிர்நோக்கு கின்றனர் என்றும் அறிக்கை குறிப் பிட்டது.

சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் விதிகளுக்கு இஸ்ரேல் கட்டுப்பட்டு நடந்து, பொதுமக்களுக்கான மனிதாபி மான உதவியை கணிசமான அளவு அதிகரிக்க வேண்டும் என்றும் அது கூறியது.

கடந்த ஆண்டு ஒக்டோபரில், ஹமாஸ் அமைப்பினர் இஸ்ரேலில் நடத்திய தாக்குதலில், 1,200 பேர் கொல்லப்பட்டதாகவும் 250 இற்கும் மேற்பட்டோர் பிணைபிடிக்கப்பட்டனர் என்றும் இஸ்ரேல் கூறியது.

கடந்த ஆண்டில் காஸாவில் 43,500 இற்கும் மேற்பட்ட பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர்.

## தேசிய மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கும்.

**பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இரத்து செய்தல்:**

இந்தச் சட்டம் நீண்ட காலமாக சர்ச்சைக்கும் அநீதிக்கும் காரணமாக இருந்து வருகிறது. உங்கள் தேர்தல் விஞ்ஞாபனம் உறுதியளித்தபடி, அதை இரத்து செய்வது ஒரு நியாயமான சமுதாயத்தை கட்டியெழுப்புவதற்கான ஒரு முக்கியமான படியாக இருக்கும்.

**காணி உரிமைகளை மீட்டெடுத்தல்:**

தற்போது இராணுவத்தால் ஆக்கிர மிக்கப்பட்டுள்ள வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தனியாருக்குச் சொந் தமான காணிகளை மீள வழங்கப்படு வதுடன், சட்டவிரோத காணி சுவீகரிப்பு களை நிறுத்துவது நம்பிக்கையை மீளக் கட்டியெழுப்புவதற்கும் நியாய மான உரிமைகளை ஆதரிப்பதற்கும் இன்றியமையாததாகும்.

**மத உரிமைகளைப் பாதுகாத்தல்:**

வழிபாட்டுத் தலங்கள் மீதான அத்து மீறலைத் தடுப்பதன் மூலமும், தமிழர் கள் அதிகம் வசிக்கும் பகுதிகளில் புதிய பௌத்த விகாரைகள் கட்டப் படுவதை நிறுத்துவதன் மூலமும் தமிழர் வழிபாட்டு உரிமைகளை நிலை நாட்டுமாறு உங்கள் அரசை வலியு றுத்துகிறோம்.

**13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்தி மாகாணசபைத் தேர்தலை நடாத்துதல்:**

புதிய அரசியலமைப்பு அங்கீகரிக்கப் படும் வரை, 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துதல் மற்றும் மாகாண சபைத் தேர்தல்களை நடத் துதல் ஆகியவை பிராந்திய ஆளு கையை வலுப்படுத்துவதற்கும் உள்ளு ராட்சிப் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்வதற்குமான முக்கியமான நடவடிக்கைகளாகும்.

**வடக்கு மற்றும் கிழக்கில் பாதுகாப்புத் துறையின் ஆதிக்கத்தைக் குறைத்தல்:**

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங் களில் பாதுகாப்புத் துறையைச் சீர்திருத் தம் செய்து, நாட்டின் மற்ற பகுதிகளுடன் ஒத்துப்போகும் நிலைக்குக் கொண்டு வருதல். இராணுவத்தால் நடத்தப்படும் பண்ணைகள், ஹோட்டல்கள் மற்றும் பேக்கரிகள் போன்ற வணிக நடவடிக் கைகளில் இராணுவத்தின் ஈடுபாடு உள்ளூர் நிறுவனங்களை முடக்குகிறது. உள்ளூர் வணிகங்கள் மற்றும் விவ சாயிகள் நியாயமான முறையில் ஈடுபடுவதை அனுமதிக்க இந்த முயற் சிகளை நிறுத்துமாறு உங்கள் அரசாங் கத்தை நாங்கள் வலியுறுத்துகிறோம்.

இந்த நடவடிக்கைகள் தேசிய மக்கள் சக்தியின்யின் வாக்குறுதிகளை நிறை வேற்றுவதில் உள்ள நேர்மையை வெளிப்படுத்துவது மட்டுமன்றி மிகவும் சமமான மற்றும் அனைவரையும் உள் ளடக்கிய இலங்கைக்கான அடித்த ளத்தை அமைக்கும் என கனடிய தமிழர் பேரவை தனது நம்பிக்கையை வெளிப் படுத்தியுள்ளது.

தேசிய மக்கள் சக்தி க்கு அதிக அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நிலையில், அனைத்து சமூகத்தினரிடையேயும் நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்கு இந்தப் பிரச்சினைகளில் விரைவாகச் செயல்படுமாறு கனடிய தமிழர் பேரவை அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

இலங்கையில் நீதி, நல்லிணக்கம் மற்றும் நிலையான அபிவிருத்தியை ஊக்குவிக்கும் முயற்சிகளுக்கு ஆதரவ ளிக்க கனடிய தமிழர் பேரவை தயாராக உள்ளது. இந்த புதிய ஆட்சியில் அர்த்த முள்ள முன்னேற்றத்தை எதிர்பார்க் கிறோம் என்றும் கனடிய தமிழர் பேரவை குறிப்பிட்டுள்ளது.




# கனடிய தபால் பணியாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டம்

கனடிய தபால் பணியாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டமொன்றை முன்னெடுத்துள்ளனர்.

தொழிற்சங்கத்திற்கும் தொழில் தருனருக்கும் இடையில் இணக்கப்பாடு ஏற்படுத்திக்கொள்ளப்படாத காரணத்தினால் இந்த வேலை நிறுத்தம் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கனடிய தபால் திணைக்களத்தைச் சேர்ந்த 55000 பணியாளர்கள் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

கனடாவில் விடுமுறைக் காலம் ஆரம்பிக்கப்பட உள்ள நிலையில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

இந்த வேலை நிறுத்தப் போராட்டமானது சிறு வியாபார நிறுவனங்களை வெகுவாக பாதிக்கும் என தெரிவிக்கப்படுகின்றது.

பணிப் புறக்கணிப்பு அல்லது தொழிற்சங்கப் போராட்டத்தினால் வாடிக்கையாளர்கள் பாதிக்கப்படுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது.







# பணியிடை நீக்கம் செய்யப்பட்ட பொலிஸை குற்றமற்றவர் என அறிவித்துள்ள கனடா

கனடாவில் சமீபத்தில் காலிஸ்தான் ஆதரவாளர்கள் சிலர் கோவிலுக்குச் சென்றிருந்த இந்துக்கள் மீது தாக்குதல் நடத்திய விடயம் பெரும் பரபரப்பை உருவாக்கியது.

அப்போது, காலிஸ்தான் ஆதரவாளர்களுடன், பணியில் இல்லாத பொலிஸார் ஒருவரும் அந்த கலவரத்தில் பங்கேற்றது தெரியவந்ததால், அவர் பணியிடைநீக்கம் செய்யப்பட்டார்.

ஆனால், ஹரிந்தர் சோஹி என்னும் அந்த பொலிஸார் குற்றமற்றவர் என பொலிஸ் துறை தற்போது தெரிவித்துள்ளது.

இந்த விவகாரம் தொடர்பில் நடத்திய விசாரணையில், தாக்குதலில் ஈடுபட்டவர்களிடமிருந்து ஆயுதங்களைப் பறிக்க ஹரிந்தர் முயன்றதாகவும் அதனால் அவர்களுடன் கைகலப்பு உருவானதாகவும் பொலிஸார் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஹரிந்தர் தனது கடமைகளை சட்டப்படியே நிறைவேற்றியதாகவும் பொலிசார் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.






ஆனால், ஹரிந்தர் மீது குற்றம் சாட்டி அவரை பணியிடை நீக்கம் செய்யக்கோரியவர்கள், ஆதாரமில்லாமல் அதைச் செய்யவில்லை.

அது தொடர்பாக வெளியான வீடியோவில், ஹரிந்தர், சீருடை அணியாமல், கையில் காலிஸ்தான் கொடியுடன், இந்தியாவுக்கு எதிராக கோஷங்கள் எழுப்பும் கூட்டத்தினருடன் நிற்கும் காட்சிகள் காணப்பட்டது குறிப்பிடத்தக்கது.